Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 25 (11-11 1991) திங்கட்கிழமை ஓசை: 266

## பயிலுநர் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக் கூடாது

உதவி அரசாங்க அதிபர்பிரிவு அடிப்படையில் நியமிக்கப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களுக்கு எவ்விதத்திலும் அவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வெளியேமாற்ற முடியாது என்று கல்விச் சேவை ஆணைக் குழுத்தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் அனைத்து கோட்டக் கல்விஅதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். இது தொடர்பான ஜூலை 13, 1990 வர்த்தமானிக்கட்டளை மாற்றப்படவில்லை என்றும் கல்விச் சேவை ஆணைக் குழுத்தலைவரின் தா/16/1191 சுற்று நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயிலுனர் ஆசிரியர், ஆசிரியைகள் நியமனம் வழங்கப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து மாற்றம் பெற்றிருப்பின் (3 ஆம் பக்கம் பார்க்க)

# தீவிரமாகிவரும் உணவு நெருக்கடி: அரச களஞ்சியங்கள் வெறுமை

## தாயகமே இனத்தின் உயிர்நாடி

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் கலை, பண்பாடு, பொருளாதாரம் வரலாறு, மொழி என்பனவற்றுக்கெல்லாம் தமிழர் தாயகமே உயிர் நாடி'' இவ்வாறு இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ மாவீரர் நாள் பணிமனை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அச்செய்திக் குறிப்பொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இன்று இந்த மண்ணின் மீட்புக்காக 3500 மாவீரர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர். அத்தோடு, போராட்டத்தில் பக்கபலமான மக்கள் பலரும் உயிர் நீத்துள்ளனர் இவ்வர்ப்பணிப்புக்களான ஐ. எமது மண்ணை ஆக்கிரமி ...ளர்களிடமிருந்து முழுமையாக மீட்கும் வரை தொடரத்தான் போகிறது. இன்றைய இப் போராட்டத்திலே இளைஞர்கள், யுவதிகள் மட்டுமின்றி சிறுவர், முதியோர் எல்லோருமே தம்மை அர்ப்பணித்துள்ளனர். எமது சுதந்திரம் வெறும் பேச்சிலோ அன்றது பேச்சுவார்த்தைகளினாலோ பெறக் கூடிய ஒன்றல்ல, இவை வரலாறு உணர்த்திய உண்மைகளை எமது போராட்... (3 ஆம் பக்கம் பார்க்க)

## 15 முதல் 21ஆம் திகதிவரை மாவீரர் எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளிற்கு எழுச்சியூட்டும் வகையில் மாவீரர் வாரத்திற்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

இம்மாதம் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரைமேற்படி எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. இக்காலப்பகுதியில் தமிழீழத்தின் அனைத்து வட்ட அலகுப்பகுதிகளிலும் இரண்டு எழுச்சிக் கூட்டங்கள் நடாத்தப்படவிருக்கின்றன. இவ்வாறு நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (க)

## ஒரு நாள் உச்சி மாநாடு சிறிலங்கா இணக்கம்

(கொழும்பு)

'சார்க்' அமைப்பை பாதுகாப்பதற்காக ஒரு நாள் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த சிறிலங்கா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் எந்த மட்டத்தில் நடத்தப்படும் என முடிவு காணப்படவேண்டும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங் (3 ஆம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டுக்கு ஒத்துழைக்க மக்களிடம் பாவ. பாதுகாப்புக் குழு கோரிக்கை

யாழ். குடாநாட்டில் உணவு நெருக்கடி நாளுக்கு நாள் தீவிரமாகி வருவதாகவும், அரசாங்கத்தின் உணவுக் களஞ்சியங்கள் வெறுமையாகியுள்ளதாகவும் பாவனையாளர் பாதுகாப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் வகையில் பொதுமக்கள் இன்று நடைமுறையிலுள்ள உணவுப் பங்கீட்டுத் திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு இவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்திற்கான தரைவழிப் போக்குவரத்துப் பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து உணவு நெருக்கடி அதிகரித்து வருகின்றது அண்மைக்காலத்தில் தரைவழியின் ஊடாக யாழ் மாவட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களில் 60-70 வீதமான உணவுப்பொருள்கள் வந்தடைந்தன. கடந்தமாதம் பதினேழாம் திகதி தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்டதைத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் உணவு முத்திரை

## பொருள் விநியோகம் சீராக்க நடவடிக்கை

பலபாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் ஒரே கூட்டுறவுச் சங்கங்களுக்கு இணைக்கப் பட்டுள்ளதால் சரியான முறையில் மேற்படி முத்திரைகளுக்கு பொருள்களை விநியோகிக்க முடியாது உள்ளது. அதனால் பாடசாலை அதிபர்கள் மதிய உணவு முத்திரைகளை கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு இணைக்கும் போது உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு பலதரப்பட்ட அளவில் வெவ்வேறு கிளைகளுடன் இணைப்பதற்கு நடவடிக்கை (3 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா சிறிலங்கா உறவில் விரிசல் அதிகரிப்பு பிரேமதாசா மீது கண்டனம்

(லண்டன்)

இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னை ஒரு சண்டியனாகக் கருதி ஏனைய பிராந்திய நாடுகளின்மீது தன்னுடைய ஆதிக்கத்தைத் திணி...

சென்றிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பாகிஸ்...

...தான் தவிர ஏனைய நாடுகளுடன் சிநேகபூர்வமான உறவுகளைப் பேணி வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## செஞ்சிலுவை காத்திருக்கிறது

## பரந்தன் சந்தியில்

# தாயகமே இனத்தின் உயிர்நாடி

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் கலை, பண்பாடு, பொருளாதாரம் வரலாறு, மொழி என்பனவற்றுக்கெல்லாம் தமிழர் தாயகமே உயிர் நாடி'' இவ்வாறு இவ்வாண்டுக்கான தமிழீழ மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ மாவீரர் நாள் பணிமனை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அச்செய்திக் குறிப்பொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இன்று இந்த மண்ணின் மீட்புக்காக 3500 மாவீரர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர். அத்தோடு, போராட்டத்தில் பக்கபலமான மக்களில் பலரும் உயிர் நீத்துள்ளனர் இவ்வர்ப்பணிப்புக்களாலேயே எமது மண்ணை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து முழுமையாக மீட்கும் வரை தொடர்ந்து போராடுகிறது. இன்றைய இப்போராட்டத்திலே இளைஞர்கள், யுவதிகள் மட்டுமின்றி சிறுவர், முதியோர் எல்லோருமே தம்மை அர்ப்பணித்துள்ளனர். எமது சுதந்திரம் வெறும் பேச்சிலோ அல்லது பேச்சுவார்த்தைகளினாலோ பெறக் கூடிய ஒன்றல்ல, இவை வரலாறு உணர்த்திய உண்மை எமது போராட்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 15 முதல் 21ஆம் திகதிவரை மாவீரர் எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளிற்கு எழுச்சியூட்டும் வகையில் மாவீரர் வாரத்திற்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

இம்மாதம் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையேற்படி எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. இக்காலப்பகுதியில் தமிழீழத்தின் அனைத்து வட்ட அலைப்பகுதிகளிலும் இரண்டு எழுச்சிக் கூட்டங்கள் நடாத்தப்படவிருக்கின்றன. இவ்வாறு நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஸ)

## ஒரு நாள் உச்சி மாநாடு சிறிலங்கா இணக்கம்

(கொழும்பு)

'சார்க்' அமைப்பை பாதுகாப்பதற்காக ஒரு நாள் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த சிறிலங்கா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் எந்த மட்டத்தில் நடத்தப்படும் என முடிவு காணப்படவேண்டும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை காத்திருக்கிறது அரசின் பதிலுக்காக

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் பராமரிக்கப்பட்டு வரும் நாற்பது பொலீஸ்காரர்களையும் அவர்களது குடும்பத்தினர் சென்று பார்வையிட வசதிகளைச் செய்வதற்கு சிறிலங்கா அரசின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த செய்தி குறிப்பொன்று ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இப் பொலீஸ்காரர்களைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா சிறிலங்கா உறவில் விரிசல் அதிகரிப்பு பிரேமதாசா மீது கண்டனம்

(லண்டன்)

இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னை ஒரு சண்டியனாகக் கருதி ஏனைய பிராந்திய நாடுகளின்மீது தன்னுடைய ஆதிக்கத்தைத் திணிக்க முற்படுவதே சார்க் மாநாடு குழம்பியதற்கான காரணம் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்த கருத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங்சோலங்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அரச முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு ஈரான் சென்றிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் தவிர ஏனைய நாடுகளுடன் சிநேகபூர்வமான உறவுகளைப் பேணி வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இலவச இணைப்பு**
**1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.**

## பங்கீட்டுக்கு ஒத்துழைக்க மக்களிடம் பாவ. பாதுகாப்புக் குழு கோரிக்கை

யாழ். குடாநாட்டில் உணவு நெருக்கடி நாளுக்கு நாள் தீவிரமாகி வருவதாகவும், அரசாங்கத்தின் உணவுக் களஞ்சியங்கள் வெறுமையாகியுள்ளதாகவும் பாவனையாளர் பாதுகாப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் வகையில் பொதுமக்கள் இன்று நடைமுறையிலுள்ள உணவுப் பங்கீட்டுத் திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்திற்கான தரைவழிப் போக்குவரத்துப் பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து உணவு நெருக்கடி அதிகரித்து வருகின்றது அண்மைக்காலத்தில் தரைவழியின் ஊடாக யாழ் மாவட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களில் 60-70 வீதமான உணவுப்பொருள்கள் வந்தடைந்தன. கடந்த மாதம் பதினேழாம் திகதி தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்டதைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் உணவு முத்திரை பொருள் விநியோகம் சீராக்க நடவடிக்கை

பலபாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் ஒரே கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு இணைக்கப்பட்டுள்ளதால் சரியான முறையில் மேற்படி முத்திரைகளுக்கு பொருள்களை விநியோகிக்க முடியாது உள்ளது. அதனால் பாடசாலை அதிபர்கள் மதிய உணவு முத்திரைகளை கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு இணைக்கும் போது உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு பலதரப்பட்ட அளவில் வெவ்வேறு கிளைகளுடன் இணைப்பதற்கு நடவடிக்கை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் சந்தியில் விமானக் குண்டுவீச்சு

பரந்தன் சந்திப் பகுதியில் விமானப்படையினர் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியுள்ளனர். நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குண்டுகளை வீசின. இதனால் ஒரு கடை முற்றாகச் சேதமடைந்தது.

4 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளின் நிலையில் முன்னேற்றம் தொண்டமான் வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்கு பதில் கடிதம் எழுதியிருப்பதாகவும் அக் கடிதத்தில் புலிகளின் நிலைப்பாடு விளக்கப்பட்டிருப்பதாகவும், முன்பிருந்ததைவிட புலிகளின் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடிதத்தின் உள்ளடக்கம் பற்றி செய்தியாளருடன் பேச தொண்டமான் மறுத்துவிட்ட போதிலும் அமைதியை ஏற்படுத்த புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவித்தார். இதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் அனுப்பிய கடிதங்களோடு ஒப்பிடுகையில் இக் கடிதம் வரவேற்கத்தக்க அம்சங்களைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

சமாதான முயற்சி தொடர்பான எனது கடிதத்திற்கு விடுதலைப்புலிகள் அனுப்பிய பதிலை முழுமையாக ஆராய்ந்து ஒரு முடிவான தீர்மானத்திற்கு வந்த பிறகு இது குறித்து அரசுடன்பேச உள்ளேன் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தொண்டமான் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியினால் அவர் எதிர்க்கட்சிகளின் கண்டனத்துக்கு உள்ளாகி இருப்பதோடு வடக்கு - கிழக்கு மாகாணத்தை ஒன்றிணைந்த மாநிலமாக இணைக்கலாம்

(3ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ராணுவம் மீது கிளைமோர் தாக்குதல்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சலப்பையாறு இராணுவ முகாமிலிருந்து, குச்சவெளி இராணுவமுகாம் நோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்கு

4 ஆம் பக்கம் பார்க்க

## 'சார்க்' அமைப்பு விதியில் மாற்றம் நவாப்ஷெரீப் - பிரேமதாசா இணைந்து கோரிக்கை

'சார்க்' அமைப்பின் விதிகள் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும், பாகிஸ்தானிய பிரதமர் நவாப்ஷெரீப்பும் இணைந்து கோரிக்கையொன்றினை விடுத்துள்ளனர் என்று சிறிலங்கா வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இந்த இரு தலைவர்களுக்கும் இடையில் இடம்

(3ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் வாரம் 21-11-1991 - 27-11-1991

## பாகிஸ்தானிய நீதிமன்றத் தீர்ப்பை நிறுத்த மன். கழகம் கோரிக்கை

பாகிஸ்தானில் சிறப்பு நீதிமன்றங்களினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட இருபது பேர்களுக்கு பொது மக்கள் முன்னிலையில் தண்டனை நிறைவேற்றப்படுவதை நிறுத்தி வைக்குமாறு சர்வதேச பொது மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் கைதிகள் எவருமே நியாயமான முறையில் விசாரிக்கப்படவில்லை என்று லண்டனில் உள்ள இந்த அமைப்பு கூறியுள்ளது.

அத்துடன் விரிவான விசாரணை முறை என்ற பெயரில் தவிர்ச்சையாக விசாரணை நடத்தியதோடு அவர்களுக்கு மேன் முறையீடு உரிமையும் அளிக்கப்படவில்லை என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## 'பாரதிய ஜனதாக்கட்சியுடன் உடன்பாடு எதுவும் இல்லை' — அர்ஜுன்சிங்

(லக்னோ)

அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டுவது குறித்த பிரச்சினையில் இந்திரா காங்கிரசுக்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையில் எந்த வித உடன்படிக்கையும் இல்லை என மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அர்ஜுன்சிங் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக ஜனதா தளக் கட்சி இவ்விரு கட்சிகளும் சேர்ந்து விஸ்வ ஹிந்து பரிஷத்திற்கு ஆதரவளித்தன என்று குற்றஞ்சாட்டியிருந்தது.

## ஆசி. வெற்றிடத்தை நிரப்ப நீதிமன்றத்தில் வழக்கு

(பதுளை)

ஆங்கில ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப உத்தரவு பிறப்பிக்குமாறு பதுளை மகா வித்தியாலய மாணவர் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களம் மேற்படி வித்தியாலய க. பொ. த. (உயர்தர) வகுப்பில் ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில ஆசிரியரை நியமிக்கவில்லை என்றும், இல: 24/91 சுற்றறிக்கைக்கமைய ஒய்வு பெற்ற ஆசிரியரைத்தானும் நியமிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பதுளை மகாவித்தியாலய மாணவியின் தந்தையான வழக்கறிஞர் நிரஞ்சன் பெரேரா இது தொடர்பான வழக்கொன்றை பதுளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

வரும் நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னதாக ஆங்கில ஆசிரியர் வெற்றிடத்தை ஏன் நிரப்பவில்லை என்பதற்கான காரணத்தைக் காட்டும்படி கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கை உயர் நீதிமன்றத்தில் இந்த ரக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது இதுதான் முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே குடும்பத்திலிருந்து 14 பேர் உயிர் இழப்பு

(சென்னை)

தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெள்ளப் பெருக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டாற்றில் வெள்ளப்பெருக்கால் பெருகியதாலேயே இந்த உயிர் இழப்பு ஏற்பட்டதாகவும், இதனால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குழந்தைகள் உட்பட 14 பேர் உயிர் இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை நடுவர் பற்றி பாக். நகைச்சுவை படம்

(டில்லி)

பாகிஸ்தான் அரசு பிரபல நகைச்சுவையாளர் உமர்சரீப்பின் நகைச்சுவைப் படைப்புகளுக்கு தடை விதித்துள்ளது. அண்மையில் ஒளிபரப்பப்பட்ட நாடகம் ஒன்று தான் இத்தடையுத்தரவுக்கு காரணம் என்று தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெற்றமைக்குக் காரணம் இலங்கை அம்பயராக இருந்தமையே என்னும் பொருள்பட தயாரிக்கப்பட்ட இந்நாடகம் ஒளிபரப்பப்பட்டமையால் பாகிஸ்தான் அரசு வெகுசிக்கல்களுக்கு இலக்கானதாகச் சொல்லப்படுகிறது.

## திருமலை வி. கழகம் வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

லெப். சிரஞ்சீவியின் ஓராண்டு நினைவு தினத்தை யொட்டி அவரது ஞாபகார்த்தமாக சுன்னாகத்தில் உதைபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் திருமலை விளையாட்டுக்கழகமும் உரும்பராய் சென்மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் திருமலை விளையாட்டுக் கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசை திருமலை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோணேஸ் பெற்றுக் கொண்டார்.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவீரரின் நினைவாக சுடர்புலிகளின் அனுசரணையுடன் ஒழுங்கிணைக்கப்பட்ட குழுவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்றைய தினம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

மாலை 4-00 மணியளவில் யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### மீனாட்சிப்பிள்ளை சுப்பையா

மீசாலை தெற்கு அமரர் திரு. வாமு சுப்பையா அவர்களின் அன்புப் பாரியார் மீனாட்சிப்பிள்ளை 10-11-91 பி. ப. 12.30 மணியளவில் சிவபதமடைந்தார் அன்னார் இராசம்மா, செல்வரத்தினம் (ஆசிரியை) காலஞ்சென்ற பரமநாதன், மற்றும் பாலசிங்கம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும், டாக்டர் தம்பித்துரை, விமலாதேவி, சிவாம் கருணா, சற்குண நாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்ஜினி, சுபாஜினி, பிரசன்னா, கவிதா, நிருபன், பிரதீபன், அர்ச்சனா, ஜீவிக்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

சமக்கிரியைகள் 11-11-91 (இன்று) திங்கள் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

மீசாலை தெற்கு,
மீசாலை.

தகவல்;
டாக்டர் வே. தம்பித்துரை

(R/1927)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
03 - 07 - 1968

## ரயிலில் குண்டு வெடிப்பு; 10பேர்மரணம்; 60பேர்காயம்


(டில்லி)

பம்பாயில் ஒரு உள்ளூர் ரயில் வண்டியில் குண்டுவெடிப்பு ஏற்பட்டதால் பத்துபேர் கொல்லப்பட்டனர். சுமார் அறுபது பேர் காயமுற்றனர்.

பம்பாயிலுள்ள கல்யாண் ரயில் நிலையத்தில் அமர்நாத் இருந்து செல்ல விருந்த உள்ளூர் ரயிலிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இக்குண்டுவெடிப்பு ஏற்பட்டது. இரவு பத்து மணியளவில் ஏற்பட்ட இக்குண்டு வெடிப்பில்காயமடைந்தோர் அருகேயுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## நினைவு கூருகின்றோம்...

1991 11 -11



### சிவன்

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியை சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு எய்திய

2ஆம் லெப். பவான் (விக்ரர் பஞ்சாட்சரநாதன் - சந்நிதிகோவிலடி, தொண்டமனாறு)

சிவன் (குட்டித்தம்பி சிவகுமார் - சின்னக் கடற்கரை, தொண்டமனாறு)

இப்போதலை தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கும் போது சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் வீரச்சாவு எய்திய

பட்டேல் (தில்லையம்பலம் ரகுபதி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

வின்சன் (ஜோசப்பிள்ளை - கன்னாட்டி, மன்னார்)

சுதுமலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

லெப். சுபாஷ் (சண்முகம் ரவீந்திரன் - பொன்னாலை தெற்கு, காரைநகர்)

கோண்டாவிலில் இந்தியப் படையினர் கைதுசெய்த போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

குட்டி (துரைச்சாமி திருமாசுரமூர்த்தி - குமரகோட்டம், கோண்டாவில்)

நெல்லியடிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழ்ப் பொதுமக்கள்

விற்றுள்ளார் ... என்று குற்றஞ்சாட்டியிருந்
உத்தரப்பிரதேசத்தில் தது.

... பாட்டு வீரருக்கான ... திறமைக்கான விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோணேஸ் பெற்றுக் கொண்டார்.

மாலை 4-00 மணியளவில் யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறும்.

# ஆசி. வெற்றிடத்தை நிரப்ப நீதிமன்றத்தில் வழக்கு

(பதுளை)

ஆங்கில ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப உத்தரவு பிறப்பிக்குமாறு பதுளை மகா வித்தியாலய மாணவர் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களம் மேற்படி வித்தியாலய க. பொ. த. (உயர்தர) வகுப்பில் ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில ஆசிரியரை நியமிக்கவில்லை என்றும், இல: 24/91 சுற்றறிக்கைக்கமைய ஒய்வு பெற்ற ஆசிரியரைத்தானும் நியமிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பதுளை மகாவித்தியாலய மாணவியின் தந்தையான வழக்கறிஞர் நிரஞ்சன் பெரேரா இது தொடர்பான வழக்கொன்றை பதுளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

வரும் நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னதாக ஆங்கில ஆசிரியர் வெற்றிடத்தை ஏன் நிரப்பவில்லை என்பதற்கான காரணத்தைக் காட்டும்படி கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கை உயர் நீதிமன்றத்தில் இந்த ரக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது இதுதான் முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது

வெள்ளப்பெருக்கால்

# ஒரே குடும்பத்திலிருந்து 14 பேர் உயிர் இழப்பு

(சென்னை)

தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெள்ளப்பெருக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

காட்டாற்றில் வெள்ளம் பெருகியதாலேயே இந்த உயிர் இழப்பு ஏற்பட்டதாகவும், இதனால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குழந்தைகள் உட்பட 14 பேர் உயிர் இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் கொலை சந்தேகநபர்கள்

# ஐவரின் பிணைமனுக்கள் நீதிபதியால் நிராகரிப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து பேரின் பிணை மனுக்களை இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் நீதிபதி எஸ். எம். சித்திக் நேற்று முன்தினம் நிராகரித்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை முக்கிய கட்டத்தில் இருப்பதாகவும், மனுதாரர்களை வெளியில் விட்டால் அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# யூக்கோவிற்கு எதிராக பொருளாதாரத் தடை

(ரோம்)

யூகோஸ்லாவிய நாட்டிற்கு குறிப்பாக செர்பிய குடியரசுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்க வேண்டுமென ஐரோப்பிய சமூக நாடுகள் தீர்மானித்துள்ளன. நேற்று முன்தினம் ரோம் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய சமூகநாடுகள் மேற்கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

பல தடவைகள் ஏற்பட்ட போர்நிறுத்தங்களை மீறிய செர்பிய குடியரசு இராணுவம் கடைசியாக ஏற்பட்ட போர் நிறுத்த நிபந்தனைகளையும் புறக்கணிப்பு செய்ததால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம்முடிவு பற்றி அமெரிக்காவிற்கும், ஐநாவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

வர்த்தக உடன்படிக்கைகளை நிறுத்துதல் எண்ணெய் விநியோகத்தை நிறுத்துதல் என்பன விரைவில் பலன் தருமென ஐரோப்பிய சமூகநாடுகள் எதிர்பார்க்கின்றன.

# மரண அறிவித்தல்

## மீனாட்சிப்பிள்ளை சுப்பையா

மீசாலை தெற்கு அமரர் திரு. ஏரமு சுப்பையா அவர்களின் அன்புப் பாரியார் மீனாட்சிப்பிள்ளை 10-11-91 பி. ப. 12.30 மணியளவில் சிவபதமடைந்தார் அன்னார் இராசம்மா, செல்வரத்தினம் (ஆசிரியை) காலஞ்சென்ற பரமநாதன், மற்றும் பாலசிங்கம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும், டாக்டர் தம்பித்துரை, விமலாதேவி, சிவாம் கருணா, சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்ஜினி, சுபாஜினி, பிரசன்னா, கவிதா, நிருபன், பிரதீபன், அர்ச்சனா, ஜீவிக்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

சமக்கிரியைகள் 11-11-91 (இன்று) திங்கள் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்;

மீசாலை தெற்கு.

மீசாலை.

டாக்டர் வே. தம்பித்துரை

(R/1927)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்

03 - 07 - 1968

★ ★ ★

வீரமரணம்

11 - 11 - 1988

## கப்டன் சரத்பாபு

(நாகராஜேஸ்வரன் சயந்தசிறி)

11 - 11 - 1988 யாழ்ப்பாணம் கன்னாதிட்டிச்சந்தியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணம்

மனிதத்துவ மேன்மை மகத்தாகச் சாதிக்க
மறப்போரில் மாண்புடன் இணைந்தாய்
இம்மண்ணின் மேல் மிதித்தவர் பாதங்களை
முறித்தே அனுப்பிட முனைந்து செயல்பட்டவன் நீ
வரலாற்றுப் பாடத்தை வந்த இந்தியப் படையினருக்கு
தகுந்த படி உணர்த்திட தக்க போர் செய்தவன் நீ
இருண்ட தமிழ் வானிலே ஒளிச்சூரியன் தோன்றிட
அயராத அரும்பேரில் பெரும்பணி புரிந்தவன் நீ
வீரமரணம் கண்டாய் வீழ்ந்துவிடவில்லை நீ
உன் பாதச்சுவட்டின் வழி பலர் பாதம் பதிக்கின்றார்
உன் இலட்சிய தமிழீழம் உதிக்கும்! உதிக்கும்!

-குடும்பத்தினர்.


சயந்தன்வில்

27/10, பாண்டியன்தாழ்வு.

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

(B/3460)

# சிவன்



1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியை சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு எய்திய

2ஆம் லெப். பவான் (விக்ரர் பஞ்சாட்சரநாதன் - சந்நிதிகோவிலடி, தொண்டமனாறு)

சிவன் (குட்டித்தம்பி சிவகுமார் - சின்னக்கடற்கரை, தொண்டமனாறு)

இம்மோதலை தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கும் போது சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் வீரச்சாவு எய்திய

பட்டேல் (தில்லையம்பலம் ரகுபதி - பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

வின்சன் (ஜோசப்பிள்ளை - கன்னாட்டி, மன்னார்)

சுதுமலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

லெப். சுபாஷ் (சண்முகம் வசந்தரதன் - பொன்னாலை தெற்கு, காரைநகர்)

சோண்டாவிலில் இந்தியப் படையினர் கைதுசெய்த போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

குட்டி (துரைச்சாமி திருமாரமூர்த்தி - குமரகோட்டம், கோண்டாவில்)

நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழ்ப் பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு வட்டுக்கச்சியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

விஜய் (லோகநாதன் ஞானசம்பந்தன் - இரத்தினபுரம், கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் - கன்னாதிட்டியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு எய்திய

கப்டன் சரத்பாபு (நாகராஜேஸ்வரன் சயந்தசிறி, "சயந்தன்வில்", 27/10 சயந்தசிறி வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்)

மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான உயர்வகுப்பு மாணவன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது உதவியாளரும் ஆசிரியருமான பாலகிருஷ்ணன்

1989 ஆம் ஆண்டு தென்னமரவடியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

இதயன் (சின்னத்தம்பி மகாலிங்கம் - சொக்குத் தொடுவாய், மணலாறு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8461)

### சிந்தனைக்கு

செயல் பயனுள்ளதாக இருக்க தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும்.

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 11-11-1991

தொலைபேசி

# சிங்கள தரப்பை மதிப்பிடவும்

தமிழர் தேசியப் பிரச்சினைக்கு உடன்பாடான, நிரந்தரமான தீர்வைக் காண சிறிலங்கா அரசு தரப்பிற்கு உண்மையான தேவையான அக்கறை இருக்குமானால் இராணுவ - பொருளாதார அழுத்தமுறை கைவிடப்பட வேண்டும். பேச்சுவார்த்தைக்கு முன் அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக வேண்டும். இவ்வாறு அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய பதில் கடிதத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா வலியுறுத்தியுள்ளார்.

இதனைப் புலிகள் தற்பொழுதுதான் முதல் முதலாக வற்புறுத்தவில்லை. பேச்சுவார்த்தை பற்றிய அறிவிப்புக்கள் வெளிவரும் போதெல்லாம் புலிகள் இதனைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். இதற்கு ஏற்றாற்போல் நடந்தும் வந்துள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்கவும், அதற்காக நல்லெண்ணச் சூழல் ஒன்றை ஏற்படுத்தவும் விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தனர். ஆனால் சிறிலங்கா அரசதரப்பு அதனை நிராகரித்து யுத்தத்தை தொடர்ந்து நடத்தியது.

இதனைக் கொண்டே சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் நல்லெண்ண சூழ்நிலை உருவாக வேண்டும் என புலிகள் தற்பொழுது மட்டும் வலியுறுத்தவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம். அதாவது ஆனையிறவு, மணலாறு சண்டைகள், தீவுப்பகுதி, சவிலும்பிட்டி தரையிறக்கங்கள் என்பவற்றிற்கு முன்பிருந்தே வற்புறுத்தி வந்துள்ளனர்.

ஆனால், பேச்சுவார்த்தை சமாதானத் தீர்வு என்பன பற்றிச் சிறிலங்கா அரசாங்கம் அடிக்கடி பேசி வந்ததே ஒழிய அதற்கான அரசியற் சூழ்நிலையினையோ அன்றி சமாதான சூழ்நிலையையோ உருவாக்கவில்லை. மாறாக, இராணுவ பொருளாதார அழுத்தங்களைத் திணிப்பதிலேயே அக்கறையாகவுள்ளது. இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதோடு பொருளாதார முற்றுகையினையும் தீவிரமாக்கியுள்ளது. அத்தோடு எதிர்கால நடவடிக்கையாக புலிகளை பெருமளவில் அழித்து இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதன் மூலம் அரசியல் ரீதியில் பலமிழக்கச் செய்யலாம் எனவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றது. இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கத்துடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது சுதந்திரமான, பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய பேச்சுவார்த்தையாக இருக்க முடியாது. இது ஏற்றுக் கொள்ள முடியாததும் ஆகும்.

மேலும் அமைச்சர் தொண்டமான் சிறிலங்கா அரசின் பிரதிநிதியாகத் தற்பொழுது பேச முன்வரவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவராக தமது சொந்த தீர்வுத்திட்டத்தின் அடிப்படையிலேயே பேச முன்வந்துள்ளார். ஆகையினால் திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தை அரசோ அன்றி சிங்கள அரசியல்வாதிகளோ எந்தளவிற்கு ஏற்றுக் கொள்வார்கள் என்பதையும் தீர்மானிக்க முடியாது உள்ளது.

இந்நிலையில் திரு. தொண்டமான் முதலில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க கூடிய ஒரு நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும். இந்த நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு சிறிலங்கா அரசியல் தரப்பிலும், சிங்கள அரசியல்வாதிகள் தரப்பிலும் இருந்து கிடைக்கும் ஆதரவு / எதிர்ப்பு என்பவற்றை சமாதான பேச்சுவார்த்தையினால் பிரச்சினையை அணுக முடியும் என்பதையும், தனது முயற்சிக்கு எந்தளவிற்கு சிங்கள தரப்பின் ஆதரவு இருக்கும் என்பதையும் அமைச்சர் தொண்டமான் மதிப்பீடு செய்வதற்கு உதவும். இது அமைச்சர் தொண்டமானிற்கும் நல்லது. தமிழ் மக்களுக்கும் நல்லது. அல்லது தொண்டமானின் முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

# உள்ளூர் விளைபொருள்களை சங்கங்கள் கொள்வனவு செய்யும்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை (7-11-91) யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு இ. சிவமகாராசா அவர்களின் தலைமையில் நடைபெற்று கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அவையாவன: உற்பத்திப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்குவதற்கு தயாராக உள்ளன. உள்ளூர் உற்பத்தியாளர் தமது உற்பத்தி பொருள்களை ப.நோ.கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் ப.நோ.கூ. சங்கங்கள் போதிய விளம்பரம் செய்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்து உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்கவும் உற்பத்தியை ஊக்குவிக்கவும் உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் உழைக்கும் சக்தியை இழந்த ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு பகுதியினருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குள் இயைபுபடுத்தி ஒரு முறைக்கு ஒரு வாரத்துக்குரிய உணவுப் பொருள்களை தற்பொழுது அமுலில் உள்ள பகிர்ந்தளிப்புத் திட்ட அடிப்படையில் இலவசமாக வழங்க முன்வந்துள்ளன. எனவே இந்நிலையில் உள்ள "இ" உணவு அட்டை வைத்திருப்போர் காத்திருக்கும் 12. 11 '91 இலிருந்து முன்னர் தமது பிரதேசத்திலுள்ள ப.நோ.கூ. சங்கம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது கூ. சங்க சமாசங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுவதாக மேற்படி கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

## முஜாகிதீன் தலைவர் மொஸ்கோவில்

ஆப்கானிஸ்தானில் கடந்த பதின்மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் உள்நாட்டுப்போரை முடிவுக்கு வரக்கூடிய பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்காக முஜாகிதீன் புரட்சிக்காரர்களின் தலைவர்களில் ஒருவரான அயானி மாஸ்கோ சென்றுள்ளார்.

## சவுதி அரேபியாவிற்கு 14 பெற்றியாட் வழங்க அமெரிக்கா முடிவு

(வாஷிங்டன்)

சவுதி அரேபியாவிற்கு பதினான்கு பெற்றியாட் ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது என்று நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவின் பாதுகாப்பை வலுப்படுத்தவே இந்த ஏவுகணைகளை வழங்க விரும்புவதாகவும்,

இந்த 830 கோடி டொலர் ஆயுத பேரத்தில் ஈராக்கின் 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதலிலிருந்து சவுதி இராணுவ தளங்களை காப்பதற்காக தரையிலிருந்து பாய்ந்து வானைத் தாக்கும் 700 ஏவுகணைகளும் அடங்கும் என்றும் "நியூயோர்க் டைம்ஸ்" தெரிவித்துள்ளது.

## கலந்துரையாடல்

யாழ் மாவட்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை 12-11-1991 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் செயலகத்தில் நடைபெறும். அனைத்து பிரதிநிதிகளையும் உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி கடற்றொழில் பிரிவு விடய இணைப்பாளர் கேட்டுள்ளார்.

## இந்தியா வெற்றி

(கல்கத்தா)

கல்கத்தாவில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

கல்கத்தா ஈடன் பூங்கா மைதானத்தில் மூன்று விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை இந்தியா தோற்கடித்தது.

பொருள்

எடுப்பதென அண்மையில் யாழ் செயலகத்தில் கூடிய மதிய உணவு முத்திரைத் திட்டம் சம்பந்தமான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மதிய உணவு தொடர்பான படிவங்கள், தரவுகள் ஆகியவற்றைத் தாமதப்படுத்தாமல் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முந்தியே சகல பாடசாலைகளும் அமைந்துள்ள உ.அ. அதிபர்களுக்கு அறிவிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்கள் நலன் கருதி மே மாதத்திற்கான முத்திரைக்கு அரிசி, மா ஆகிய பொருட்களை கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகிக்க திட்டப்பணிப்பாளர் உதவி புரிவதாகக் கூறினார்.

ஒரு நாள்

கள் தெரிவித்துள்ளன. அத்துடன் இதற்கு இணக்கம் காணப்பட்டால் டிசம்பர் நடுப்பகுதியில் இந்த உச்சி மாநாட்டை நடத்தவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே நேரம் இலங்கையில் ஒருநாள் உச்சிமாநாடு நடந்தால் நிச்சயம் கலந்துகொள்வேன் என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நவாப்ஷெரீப்

பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

'சார்க்' அமைப்பில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இரு தலைவர்களும் ஆராய்ந்ததாகவும் "சார்க்" கூட்டங்கள் தொடர்பான விதிகள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டனர் என்றும் சிறிலங்கா வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாயகமே

டத்திலே மாவீரர்களனைவரின் பதின்மூன்று வயதுச் சிறுவர் கூட அங்கிருக்கின்றார்கள். இந்தச் சிறுவனின் கரங்களில் இருக்கும் ஆயுதம் அரசியல் தெளிவு அற்றது எனக் கூறுவோரும் உண்டு. தனது மண்ணில் நடக்கின்ற நிகழ்வுகளை உணர்கின்றபோது ஆயுதம் ஏந்தி தாயகம் மீட்கும் அவசியத்தை எல்லோருமே உணர்வார்கள். எத்தியோப்பியா விடுதலை பெற வேண்டுமென ஒன்பது வயதுச் சிறுவர் கூட ஆயுதம் ஏந்தினர். போராட்ட உணர்வுகளே தியாகங்களையும், விடுதலையையும் தருகின்றன. இவற்றிற்கு வயதும் அனுபவமும் காரணமாக இருக்கப்போவதில்லை. ஒருவன் ஆயுதம் ஏந்துவது என்பது சாதாரணமான விடயமல்ல. ஒரு தேசிய இனத்தை இல்லாது ஒழிக்க வேண்டுமானால் அந்த இனம் அழிக்கப்படுவதோடு மட்டுமின்றி அவர்களுடைய மண்ணும் வரலாற்றுத் தடங்களும் இல்லாது ஒழிக்கப்படவேண்டும் என்பதற்காக திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்கள் நிறைவேற்றப்படுகின்றன. காலப்போக்கில் இந்த மண்ணில் தமிழன் வாழ்ந்தானா? என்ற கேள்விக்கு இடமில்லாமல் போய் விடும்.

ஒரு தேசிய இனத்தினுடைய மண், மொழி, கலை பண்பாடு பொருளாதார வரலாறு என்பவற்றினுடைய அனைத்திற்கும் உயிர்நாடி சொந்த மண். எனவே மண்ணை ஒருபோதும் இழக்க முடியாது. சொந்த மண்ணை மறப்பவர் தன்னை மதியாதவர். எனவேதான் எமது மண்ணும் இன்று பறிக்கப்பட்டுப் போகிறது. நாம் பேசுகின்ற தமிழ் உயிர் இருக்க வேண்டுமானால் இந்த மண்ணின் விடுதலைக்காக எவ்வேளையிலும் எம்மை அர்ப்பணிக்கின்ற உணர்வு உறுதி இருக்க வேண்டும். இந்த உறுதியை உணர்வை எமக்குத் தோற்றுவிக்க 3500 மாவீரர்கள் நாம் நடந்து திரிகின்ற மண்ணிலே புதைந்துள்ளனர். இந்த மாவீரர்களை நினைவு கொள்வதன் மூலம் போராட்டத்தினுடைய எமது சமூகத்தினுடைய அவசியங்களை உணர்ந்து கொள்ளலாம். இம் மாவீரர்களுடைய தியாகங்கள் பலமான எதிரியை இம் மண்ணிலிருந்து விரட்டி அடித்த வேளைகளில் வீழ்ந்தவை. எமது மக்களின் எழுச்சிக்காக வீழ்ந்தவர்கள். இது எமது மண். எமக்கு விடுதலை என்ற உணர்வோடு எல்லோரும் போராட முன் வரும்படியும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

பயிலுநர்

அவர்கள் யாவரும் தாம் நியமனம் பெற்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மீளவும் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேவையாற்றுபவர்களுக்கு சம்பளம் வழங்குவது சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் பயிலுனர் ஆசிரியர்கள் தாம் நியமனம் பெற்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வெளியே மாற்றலாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின்

என்ற கருத்தினை அரசியல்வாதிகளின் பலத்த கண்டனத்துக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று பி.பி.சி மேலும் தெரிவித்தது.

தொண்டமானுக்கு புலிகள் எழுதிய கடிதம் பற்றிய கருத்தை வெளியிட்ட சண்டே ஒப்சேவர் மேலும் தகவல் தருகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் பரிசீலிக்க விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளருக்கும்

## வரவு - செலவுத்திட்ட சம்பள உயர்வு கிடைக்கும்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் சம்பள உயர்வுகள் அனைத்தும் இனிமேல் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கும் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையின் படி தினசரி சம்பளம் 75 ரூபாவாக அதிகரிக்கப்படக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் அகதிகள் மட்டும் தலைமன்னார் வருவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து திரும்பும் இலங்கை அகதிகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே தலைமன்னார் துறைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் வருவதை முன்னிட்டு தலைமன்னார்த் துறை புனரமைக்கப்பட இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## வரவு செலவுத் திட்டம் நாளை சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமரும், நிதி அமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்கா தனது மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த வரவு செலவுத் திட்டம் சிறிலங்கா அரசாங்கத்தின் கடந்தகால நடவடிக்கைகளுக்கு ஏற்ப மிகச் சுருக்கமாக தயாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையின் பிரகாரம் ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இளைஞனின் சடலம் கரை ஒதுங்கியது

(வடமராட்சி கிழக்கு)

கடற்படையின் தாக்குதலினால் மரணமான மீனவர் சடலம் மூன்று நாட்களின் பின் நாகர்கோவில் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

உடுத்துறையைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சாந்தகுமார் [வயது 23] என்பவர் மூன்று நாட்களுக்கு முன் மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பாமல் இருந்தார். இவர் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகியிருக்கலாம் எனத் தெரிகிறது.

இவர் தொழிலுக்குச் சென்ற கட்டுமரம் ஏற்கனவே சிதைவடைந்த நிலையில் கரை ஒதுங்கியிருந்தது. (36)

## முஸ்லிம் காங்கிரஸ் பிரேமாவை பலப்படுத்தும்

(கொழும்பு)

நாட்டில் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்தும் ஒரு அணுகுமுறையையே தமது கட்சி பின்பற்றி வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். அஷ்ரப் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் முஸ்லிம் காங்கிரசின் குரலை ஜனாதிபதி பிரேமதாசா மதிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் கட்சிக்கு சேறுபூசும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## 60 வெளிநாட்டு அகதிகள் ஜேர்மனியில் அவதி

(போன்)

கிழக்கு ஜேர்மனியால் வெறுக்கப்பட்டு, மேற்கு ஜேர்மனியாலும் ஒதுக்கப்படும் அறுபது வெளிநாட்டு அகதிகள் திரிசங்கு நிலையில் உள்ளார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஜேர்மனியில் 200புதிய நாஜி அடிப்படைவாதிகளினால் இந்த அகதிகளின் விடுதி தாக்கப்பட்டது. இவர்கள் மே ஜேர்மனிக்கு இடம்பெயர்ந்து லூதரின் திருச்சபையிடம் பாதுகாப்பாக உள்ளனர்.

மேற்கு ஜேர்மனியில் செலஷ்விக் - ஹொலஸ்டிஷ் மாநிலத்தில் தங்கியிருக்கும் இவர்கள் ஒரு வாரத்துக்குள் முன்னைய இருப்பிடமான கிழக்கு ஜேர்மனி நகரமான கிறிப்ஸ்வால்ட்டிற்கு திரும்பும்படி மாநில முதலமைச்சரால் பணிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாநிலமான மெக்லென்பேர்க்கிற்கு திரும்பா விடில் புகலிடத்துக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் 16 மாநிலங்களிலும் வெளிநாட்டு அகதிகள் இருப்பதால் விடுதிகள் நிரம்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவிடம் சிறிலங்கா மன்னிப்புக் கோர வேண்டும்

## - அநுரா

இந்திய அமைதிப்படைக்கு எதிராக அரசு புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமைக்கு சிறிலங்கா அரசு இந்தியாவிடம் மன்னிப்புக்கோரவேண்டும். இதே வேளை 1983 - 1987 இடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியா தமிழ் தீவிரவாதிகளுக்கு பயிற்சி வழங்கியதற்கு இந்தியா சிறிலங்கா அரசிடம் மன்னிப்புக் கோர வேண்டுமென்று கொழும்பில் செய்தியாளருக்கு எதிர்க்கட்சித்தலைவர் அநுரா பண்டாரநாயக்கா கூறியதாக பி.பி.சி. சிங்களச் செய்தியில் தெரிவித்தது.

## அநுராவின் கூற்றிற்கு சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

'சார்க்' உச்சி மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது தொடர்பாக எதிர்க்கட்சிகள் சார்பில் கருத்து வெளியிட்ட அநுரா பண்டாரநாயக்காவின் கூற்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறை கூறியுள்ளார்.

இலங்கை இந்தியாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற தொனியில் கருத்துத் தெரிவித்த அநுராவின் கருத்தையே சிறிமாவோ ''தேசிய நலனை அடகு வைக்க விரும்புகிறார்'' என்று தெரிவித்துள்ளார்.

## இராணுவம் மீது எறிகணைத் தாக்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள சித்தன் குறிஞ்சிப் பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர். நேற்று மாலை நான்கு மணியளவில் நடந்த இத் தாக்குதலினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் பற்றித் தெரியவரவில்லை.

## சாவகச்சேரியில் ஹெலி தாக்கு

சாவகச்சேரியில் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு சுட்டது.

நேற்று மதியம் ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கல்வயல் நுணாவில் பகுதியை நோக்கியே அத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

## புலிகளின் விநியோகவழி கண்டுபிடிக்கப்பட்டது

### இந்திய கடற்படை அதிகாரி

(சென்னை)

காரைக்காலில் இருந்து பத்து மைலுக்கப்பால் கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கப்பலும் அதிலிருந்தவர்களும் நேற்றுக் காலை சென்னைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது.

இது தொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இந்தியகடற்படை அதிகாரி ஒருவர் ஆயுதங்களுடன் சென்ற ஒருபடகு இந்திய கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டதாக குறிப்பிட்டார். அத்துடன் இக்கப்பலில் ஏராளமான வெடிமருந்துகள், நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பன இப்படகில் இருந்ததாகவும், இது பற்றிய விபரங்கள் இனிமேல் தான் கண்டறியப்பட வேண்டுமென அவர் மேலும் கூறினார்.

கைப்பற்றப்பட்ட சில ஆவணங்களின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்படும் விதம் தெரியவந்துள்ளதாகவும், கப்பலில் இருந்த நாட்குறிப்பு ஒன்றின் மூலம் ஆயுதம் வழங்குவோர் பற்றிய விபரம் தொலைபேசி எண்கள் முகவரிகள் என்பன உட்பட தரையிலிருந்து வானுக்குஏவும் ஏவுகணைகள் வழங்கப்படுவது பற்றிய விபரமும் தெரிய வந்திருப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கப்பலில் பெரிய கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கும் ராடர் சாதனம் உட்பட செயற்கைகோள்களுடன் தொடர்பு படுத்தக் கூடிய தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும்திசைமானிகள் என்பன இருக்கக் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## மக்கள்குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல்

மாங்கிட்டபுரம் தச்சன்காட்டுச்சந்திக்கருகே நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்களின் வாழ்விடங்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்கள். நேற்றுக்காலை இத் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்றுப்பிற்பகல்மூன்று முப்பது மணியளவில் 'வலிகாமம் பகுதியில் கனிமர் பிரயோகம் செய்துள்ளது.

## காலை உணவில் நஞ்சு; 125 ராணுவத்தினர் மயக்கம்

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள திஸ்ஸவெவ இராணுவ முகாமைச் சேர்ந்த நூற்றி இருபத்தைந்து இராணுவத்தினர் அநுராதபுரம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது

நேற்றுக்காலை காலை உணவை முடித்துக்கொண்ட போது இந்த இராணுவத்தினர் மயக்கமுற்று விழுந்ததாகவும் அதனை அடுத்து இவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிகின்றது.

இந்த இராணுவ முகாமில் வழங்கப்பட்ட காலை உணவில் விஷம் ஏதும் கலக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் இராணுவ அதிகாரிகள் இது தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

தீவிரமாகிவரும்

தொடர்ந்து பொருள்களின் வருகை பெருமளவில் தடைப்பட்டது

இதேவேளை யாழ். செயலகத்தின் களஞ்சியங்களிலும் உணவுப்பொருள்கள் கையிருப்பு முற்றாகத் தீர்ந்து விட்டதாகத் தெரிகின்றது கையிருப்பில் இருந்த உணவுப் பொருள்கள் பங்கிடப்பட்டுவிட்டன. இன்றைய நிலையில் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்துள்ள 'லிலி' கப்பலில் உள்ள 1200 மெற்றிக்தொன் அரிசியும், 1200 மெற்றிக் தொன் மாவும், 200 மெற்றிக்தொன் சீனியும் மட்டுமே கையிருப்பில் உள்ளது

ஆனால், யாழ் மாவட்டத்தில் தற்போதுள்ள அகதி முகாங்களுக்கு மட்டும் வாராந்தம் 1205 மெற். தொன் அரிசியும் 830 மெற். தொன் மாவும், 86 மெற். தொன் சீனியும் தேவை இந்நிலையில் தற்போது கப்பலில் உள்ள உணவுப் பொருள்கள் அகதி முகாங்களுக்கு மட்டுமே விநியோகிப்பினும் ஒரு வாரத்திற்கே போதுமானவையாக இல்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

தனியார் வர்த்தகரிடம் சிறிதளவு கையிருப்பு இருப்பினும் அவர்கள் அதை தெளிவாக வெளியிடுவதாக இல்லை. இந்நிலையில்' மக்களுக்கு ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பாவனையாளர் பாதுகாப்பு குழுவிற்கு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்கி உணவு விநியோகத்தை சீர்செய்ய உதவவேண்டும் எனவும் பதுக்கல், கள்ளச் சந்தை என்பனவற்றிற்கு எதிராக செயற்படவேண்டும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## இராணு. மீன் பிடிக்கும் கைதாகிய மீனவர்?

கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் பாஷையூர், குருநகர் பகுதிகளில் இருந்து பூநகரி- கல்முனைக்குச்சென்ற நான்கு மீனவர்களும் இராணுவத்தினருக்கு மீன், இறால் பிடித்துக்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தினமும் மேற்படி தொழிலாளர்களின் கட்டுடையை நோக்கி வரும் வள்ளம் மீன்களைப் பிடித்துக்கொண்டு திரும்பவும்இராணுவக்காவல்அரணை நோக்கிச் செல்வதைத் தூரநிற்கும் கடற்றொழிலாளர்கள் கண்டுவந்து தெரிவிக்கின்றனர்

கடந்த மாதம் 25 ஆம் திகதி கடல் தொழிலுக்காக பூநகரி. கல்முனைக்குச்சென்ற மீனவர்கள் இராணுவத்தினரிடம்சிக்கி இருப்பது தெரிந்ததே. (21)

செஞ்சிலுவை

குடும்பத்தினர் யாழ்ப்பாணம் வந்து பார்வையிட அண்மையில் தலைவர் பிரபாகரன் அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே.

திருமலையில்

தல் நடத்தினர்.

இத் தாக்குதலினால் சிறிலங்கா இராணுவத்தினருக்குப் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது

மேலும் மூதூர் பகுதியிலுள்ள கூனித்தீவு பாடசாலையில்எட்டாம் திகதிமுதல் சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பரந்தன்

இதேவேளை குஞ்சுப் பரந்தன் பகுதியிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இங்கும் இரு குண்டுகள் வீசப்பட்டதால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது.